# சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தல் குற்றச்சாட்டு தொடர்பான சம்பவத்தின் பின்னதாக இலங்கை ஊடகங்களின் அறிக்கையிடல்

***11 டிசம்பர் 2019, கொழும்பு, இலங்கை:***

நவம்பர் 27, 2019 அன்றோ அல்லது அதனை அண்மித்த ஒரு தினத்தில் இலங்கையிலுள்ள சுவிட்ஸர்லாந்து தூதரக ஊழியர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு, பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டும் மற்றும் தூதரக விடயங்கள் தொடர்பாக வினவப்பட்ட அண்மைய சம்பவம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது.

இந்தச் சம்பவங்களை புலன்விசாரணை செய்யும் உத்தியோகபூர்வ செய்முறைகள் தொடர்பாக கருத்து தெரிவிப்பது மிகவும் முன்கூட்டியதாக இருக்கும் இவ்வேளையில், அரச ஊடகங்கள் மற்றும் ஏனையவை உட்பட, இலங்கையிலுள்ள பல்வேறு ஊடகங்களின் நடத்தை குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவலை அடைந்துள்ளது. இவ்வூடகங்கள், குற்றம்சாட்டப்பட்ட பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரது குடும்பத்தின் அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் நடந்து கொண்டதுடன் அது அவர்களது அந்தரங்கம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பாரிய பிரச்சினைகளை எழுப்புகின்றது. இது, ஊடக தர்மத்தின் ஓர் அப்பட்டமான மீறலென்பதுடன் பாதிக்கப்பட்டவரின் அந்தரங்கத்திற்கான உரிமையையும் உதாசீனம் செய்கிறது. பாலியல் துன்புறுத்தல் உட்பட பல்வேறு குற்றங்கள் தொடர்பான சந்தேகநபர் எனக் குற்றம்சாட்டப்படும் ஒரு நபரின் பெயரை பிரசுரிப்பதை அல்லது அடையாளத்தை அறியச் செய்யும் ஏதேனும் விடயத்தை மேற்கொள்வதை, குற்றவியல் கோவையின் பிரிவு 365 'இ' படி இரண்டு வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமாக கருதுகின்றது. மேலும், 2015ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, குற்றங்கள் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புச் சட்டம், குற்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சமத்துவமான வகையில், நியாயமாகவும் மற்றும் அவர்களது கௌரவம் மற்றும் அந்தரங்கத்திற்கு மதிப்பளித்து நடத்தப்படுவதற்கு உரிமை அளிக்கிறது.

பாதிக்கப்பட்டவரின் உரிமைகளுக்கு உரிய கவனம் அளிப்பது உட்பட, சட்டம் மற்றும் ஊடக தர்மங்களை மதித்து மற்றும் அவற்றை அனுசரிப்பதற்கு ஊடக நிறுவனங்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வேண்டிக் கொள்கிறது. இந்த விடயத்தில் தொடர்ச்சியான உதாசீனம் கடுமையான கரிசனங்களை எழுப்புவதுடன், இது தொடர்பாக அதிகாரங்களின் கவனமும் மற்றும் அவசியமான நடவடிக்கைகளும் தேவைப்படுத்துகின்றது.

புலன்விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையிலும் கூட, சில அரச அதிகாரங்களும் மற்றும் உத்தியோகபூர்வ பதவிகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களும் குற்றம்சாட்டப்பட்ட பாதிக்கப்பட்டவர் கட்டுக்கதைகளைக் கூறுவதாக குற்றம்சாட்டுவதை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் கொள்கிறது. அத்தகைய கூற்றுகள், மேற்கொள்ளப்படுகின்ற புலன்விசாரணைகளில் பக்கச் சார்பினை ஏற்படுத்தும் என்பதுடன் புலன்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் சுயாதீனமாக இருப்பதற்கும் மற்றும் அத்தகைய செய்முறைகளில் தலையீடு இல்லாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் அதிகாரிகளை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வேண்டிக் கொள்கிறது.

இறுதியாக, சமூக ஊடகங்களில் தகவல்களைப் பிரசுரிக்கும் போதும் மற்றும் பகிரும் போதும் பொறுப்புணர்வு மற்றும் இரக்கத்தை காட்டுமாறு பொதுமக்களிடம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கேட்கின்றது. எங்களது சமூகம் பாலியல் தொல்லைகளின் ஓர் அதிகரித்த நிகழ்வுகளால் பீடிக்கப்பட்டுள்ளது, இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் இவற்றை முறையிடுவதால் மேலும் தொல்லைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்ற அச்சமில்லாமல் அவை பற்றி முறைப்பாடுகள் செய்வதற்கு சுதந்திரமாகவும் இயலுமாக இருப்பதும் முக்கியமானதாகும். மேலும், ஒரு சுயாதீனமான புலன்விசாரணை மேற்கொள்ளப்படும் வரையும் மற்றும் மேற்கொள்ளப்பட்டாலன்றி உண்மைகள் நிரூபிக்கப்படாதிருக்கவோ அல்லது உறுதிப்படுத்தப்படவோ முடியாது போகலாம், என்பதினால் முறையற்ற அழுத்தம் இல்லாது செயற்படுவதற்கு அதிகாரிகள் அனுமதிக்கப்படல் வேண்டுமென்பது அவசியமானதாகும்.